# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் பொங்கல் விழா!

## துணை முதல்வர் உரை... 9 ஆம் பக்கத் தொடர்ச்சி




தான் இருக்கின்றன. இந்த 14 மாதங்களும் ஒவ்வொரு நாளும், நம் தேர்தல் பிரச்சாரத்தை மக்களிடத்தில் கொண்டு போய் சேர்க்க வேண்டும். இந்த நான்கு வருடங்களில் கழக அரசு செய்திருக்கின்ற சாதனைகளை, மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும்.

நம் முதலமைச்சர் பொறுப்பேற்று போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கு கட்டணமில்லா பேருந்துத் திட்டம். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் கிட்டதட்ட 900-திலிருந்து ஆயிரம் ரூபாய் வரை இந்தத் திட்டத்தில் சேமிக்கிறார்கள். 610 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

### கல்வி ஊக்கத் தொகை!

பெண்கள் படிக்க வேண்டும். பள்ளிக்கூடம் படித்தால் மட்டும் பத்தாது. உயர் கல்வி படிக்க வேண்டும் என்று புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சென்று, எந்தத் துறையில் சேர்ந்தாலும் அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்குகிறது நம் திராவிட மாடல் அரசு.

மாணவர்களும் கல்லூரி படிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளியில் படித்து கல்லூரிப் படிப்பு படிக்க வந்தால், அவர்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் தமிழ்ப்புதல்வன் என்ற திட்டத்தின் மூலம் கல்வி ஊக்கத்தொகை வழங்குகிறது நம் கழக அரசு. ஒவ்வொரு வருடமும் 8 லட்சம் மாணவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைகிறார்கள். தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப்பெண்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம், நம் தலைவர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டம். அதுதான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்கள் தினமும் பள்ளிக்கு வந்தார்கள் என்றால், முதலில் அவர்களுக்கு வயிறார சாப்பாடு. அதன் பிறகுதான் கல்வி. இப்போது பெற்றோர்கள் வாழ்த்தி அனுப்புகிறார்கள் என் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ள நம் திராவிட மாடல் அரசு இருக்கிறது. நம் முதலமைச்சர் இருக்கிறார் என்று வாழ்த்தி அனுப்புகிறார்கள். ஒவ்வொரு நாளும் திங்கள் முதல் வெள்ளி வரை 20 லட்சம் குழந்தைகள் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். எல்லோரும் கேட்கிறார்களே `திராவிட மாடல் அரசு' என்று சொல்கிறீர்களே? அது என்னவென்று? இதுதான் திராவிட மாடல் அரசு. மற்ற மாநிலங்களில் இருந்து வந்து இந்தத் திட்டத்தை எப்படி செயல்படுத்த வேண்டும் என்று மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருப்பதுதான் நம் திராவிட மாடல் அரசு. அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டுதான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.

### முத்தாய்ப்பாக ஒரு திட்டம்!

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஒரு திட்டம். நம் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம். மாதம் ஆயிரம் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். கடும் நிதி நெருக்கடி. ஆனாலும் நம் தலைவர் அவர்கள் அதை செய்துகாட்டினார். 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் தேதி அறிவித்தார். முத்தமிழறிஞர் கலைஞரின் பெயரில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். விண்ணப்பித்தது ஒரு கோடியே 55 லட்சம் மகளிர். அதில் கிட்டத்தட்ட 70 சதவிகித மகளிருக்கு சரிபார்க்கப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு இன்றைக்கு ஒவ்வொரு மாதமும் 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. 15-ஆம் தேதிதான் கொடுப்பார்கள். ஆனால், இந்த முறை முதலமைச்சர் சொல்லிவிட்டார். `பொங்கல் பண்டிகை வருகிறது. அதற்கு, நான்கு நாளைக்கு முன்பே கொடுங்கள்' என்று நேற்று முன்தினமே எல்லா தொகையும் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்படி ஒவ்வொரு திட்டத்தையும் நம் தலைவர் அவர்கள் பார்த்து, பார்த்து செய்து கொண்டிருக்கிறார். இந்தத் திட்டங்களை எல்லாம் நீங்கள் மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். திண்ணை பிரச்சாரம் செய்ய வேண்டும். எப்படி சென்ற நாடாளுமன்ற தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் கொடுத்தார்களோ? அதேபோல் இப்போது வர இருக்கின்ற ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் அதில் நாம் போட்டி போட போகிறோம்.

நாம் போட்டி போட போகிறோம் என்று சொன்னவுடனே அ.தி.மு.கவினர் விலகி விட்டார்கள். ஏனென்றால், அவர்களுக்குத் தெரியும் தோல்வி உறுதி செய்யப்பட்ட ஒன்று என்று. இதுவரைக்கும் பத்து தோல்வி பழனிச்சாமி. நம் தலைவர் அவர்கள் தலைவராக பொறுப்பேற்ற பிறகு சந்தித்த அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி. திரு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் சந்தித்த அனைத்துத் தேர்தல்களிம் தோல்வி. அதனால்தான் நம் தலைவர் அவர்கள் சொன்னார்கள், `பத்து தோல்வி பழனிச்சாமி' என்று.

### நம் தலைவர், நம் இலக்கு!

இப்போது ஈரோடு சட்டமன்ற இடைத் தேர்தல் நடந்தால், அவர் பத்து தோல்வி பழனிச்சாமி இல்லை, சட்டமன்ற தேர்தலில் நிச்சயம் 12 தோல்வி பழனிச்சாமி ஆகப் போகிறார். நம் தலைவர் அவர்கள் நமக்கு இலக்கு கொடுத்திருக்கிறார். 200 தொகுதிகளில் நாம் வெற்றி பெற போவது நிச்சயம். `வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு' என்று சொல்லி இருக்கிறார்.

எந்த நம்பிக்கையில் சொல்லி இருக்கிறார். கழகத்தின் நிர்வாகிகள், கழகத்தின் அணிகள் நீங்கள் அத்தனை பேரும் சட்டமன்றத் தேர்தலில் களத்தில் இறங்கி, அடுத்த 14 மாதம் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, நம் சாதனைகளை மக்களிடம் கொண்டுபோய் சேர்ப்பீர்கள் என்ற நம்பிக்கையில் சொல்லி இருக்கிறார். எனவே, நான் உங்களிடத்தில் கேட்டுக் கொள்வதெல்லாம். தலைவர் சொன்னதைப் போல நம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள தொகுதிகள் காஞ்சிபுரம், உத்திரமேரூர், செய்யூர், மதுராந்தகம்.

200 வெற்றி பெறப்போவது உறுதி. அந்த 200-இல் இந்த நான்கு தொகுதிகளையும் நீங்கள் அனைவரும் உறுதி செய்து வெற்றியைத் தொடங்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வெற்றி 234 தொகுதிகளிலும் எதிரொலிக்கும் வகையில், இருக்க வேண்டும் என்று சொல்லி உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது பொங்கல் வாழ்த்துகளைச் சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

முன்னதாக காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவில், கடப்பாக்கம் பகுதியில் கழகக் குடும்பத்தைச் சேர்ந்த தம்பி ஜா.பாஸ்கரன் - ப.இந்துமதி இணையரின் திருமணத்தை, இடைக்கழிநாட்டில் நடத்தி வைத்து,

மணமக்கள் இருவரும் தைப்பொங்கலும் - தமிழர் பண்பாடும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார்.

### பங்கேற்றவர்கள்!

சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் மகாலட்சுமி, செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், இனியரசு, கோகுல கண்ணன், மலர்விழி குமார், சன் பிராண்ட் ஆறுமுகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இரா. நாகன், டி.ஆர்.நாராயணன், மருத்துவர் ஆர்.டி.அரசு, எம்.எஸ்.சுகுமார், அணிகளின் மாநில நிர்வாகிகள் சுகுமாரன், அன்பழகன், சுந்தரராமன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், மாநகரச் செயலாளர் தமிழ்ச்செல்வன், குமார், கண்ணன், தம்பு, சத்யசாய், சிவக்குமார், ராமச்சந்திரன், ஏழுமலை, சரவணன், சிற்றரசு, பாபு, பி.எம். குமார், ஞானசேகரன், டி.குமார், குமணன், வி.எம்.பாபு, சேகர், சந்துரு, திலகர், தசரதன், கதிரேசன், மோகன்தாஸ், வி.டி.ஆர்.வி.எழிலரசன், சுந்தரமூர்த்தி, பாரிவள்ளல், பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏழுமலை, ராஜேந்திரன், மாநில ஐ.டி விங் துணைச் செயலாளர் இசை, சாந்தி ராமச்சந்திரன், சம்யுக்தா அய்யனார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் யுவராஜ், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சுகுமார், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணி, பால்ராஜ், சஞ்சய் காந்தி, அருள்முருகன், ஆண்டோ சிரில்ராஜ், யுவராஜ், ஜாக்டோ ஜியோ அமைப்பைச் சேர்ந்த தியாகராஜன், கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்ட மருவூர் அன்பழகன், பாஸ்கர் உள்பட கழக முன்னணியினர் பலரும்கலந்து கொண்டனர்.



தமிழர்களின் வீர விளையாட்டான உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு வரும் 16ஆம் தேதி நடைபெறுகிறது. இந்நிகழ்வில் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று துவக்கி வைக்க உள்ளார். அதற்கான முன்னேற்பாடு பணிகளை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் சென்று ஆய்வு செய்தார். உடன் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் மற்றும் விழா கமிட்டியினர், கழக நிர்வாகிகள், அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளனர்.



மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் தேர்வு நிலை பேரூராட்சியில் டாக்டர். அம்பேத்கர் பேருந்து நிலைய மேம்பாட்டு பணிகள் மற்றும் வணிக வளாகத்தை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, பேரூராட்சிகளின் இயக்குனர் கிரண் குராலா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், பேரூராட்சி சேர்மன் ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் உடன் உள்ளனர்.

### பொய் - புரட்டு - பித்தலாட்டம் என்பதற்கு இன்னொரு பெயராக உள்ள

# சீமானோடு விவாதிப்பது நான் படித்த படிப்பிற்கு அவமானம்!

## புதுக்கோட்டையில் சுப.வீரபாண்டியன் பேட்டி!

புதுக்கோட்டை, ஜன. 14-

மக்கள் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்காதீர்கள், பல்கலைக்கழகங்கள் அனைத்தையும் ஒன்றிய அரசு எடுத்துக் கொள்ளப் போகிறது. அதைப் பற்றி விவாதிக்காதீர்கள். நீட் தேர்வு குறித்து விவாதிக்காதீர்கள், பெரியார் பற்றி என்னோடு விவாதித்துக் கொண்டிருங்கள் என்று சொன்னால் அவருடைய நோக்கம் என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள். சீமான் ஒன்றும் பெரியாரை கரைத்து குடித்தவர் அல்ல. அவர் சொல்லுகின்ற எந்த மேற்கோளும் உண்மையானது அல்ல, பொய்புரட்டு பித்தலாட்டம் என்பதற்கு இன்னொரு பெயராக அவர் இருக்கின்றார். நீங்கள் சொன்னதற்கு ஆதாரம் எங்கே என்று கேட்டால், அதை நீங்கள் தானே வைத்திருக்கிறீர்கள் என்கிறார். நாங்கள் வைத்திருக்கிற ஒன்றை நீங்கள் எப்படி படித்துவிட்டு சொன்னாய், எனவே எந்த சான்றும் இல்லாமல் எந்த ஒரு அடிப்படை அறிவும் இல்லாமல் படிப்பறிவே சுத்தமாக இல்லாமல் சத்தம் போட்டு பேசினால் கதாநாயகன் ஆகி விடலாம் என்று கருதுகிறார். இதைப் பற்றி பேசிக் கொண்டே இருப்பதால் எல்லோரும் தன்னைப் பற்றிய பேசுவார்கள்.

தனக்கு ஒரு மலிவான விளம்பரம் கிடைக்கும், நாட்டினுடைய பிரச்சினைகள் பேசப்படாமல் போய் விடும் என்று கருதுகிறார்.



அவர் அறியாமையிலும் ஆணவத்திலும் அல்ல; ஆர்.எஸ்.எஸ்.இன். அடையாளமாக நின்று பேசுகிறார். அவரோடு நான் விவாதத்திற்கு போவது என்பது நான் படித்த படிப்பிற்கு அவமானம்.

சீமான் சொன்னதற்கான ஆதாரம் இருக்கின்றதே என்று பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை சொல்கிறாரே, அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த சுப.வீரபாண்டியன் ஆதாரத்தை மாலையில் வெளியிடுகிறேன் என்று சொன்னார். மூன்று மாலைகள் போய்விட்டது. இன்று வரை எந்த ஆதாரத்தையும் அவர் வெளியிடவில்லை. அவர் ஆதாரத்தை வெளியிட்டும் அதற்குப் பிறகு நான் பேசலாம்.

யார் யார் நாட்டாமை என்று புரியவில்லை. யார் யாரை எந்தெந்த நேர்கோட்டில் வைத்து பார்க்க வேண்டும் என்றெல்லாம், இவரை கேட்டு விட்டுதான் பேச வேண்டும் என்கின்ற எந்த நோக்கமும் இல்லை.

அவருக்கு தோற்றுவதை அவர் பேசலாம். உண்மைகளை நாம் மக்களிடம் பேசுவோம். பேசுவதற்கான எல்லா உரிமையும் எல்லோருக்கும் ஒன்றுதான் யாரையும் அப்படி பேசாதீர்கள் என்று சொல்ல இவருக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஒரு தொகுதியில் கூட கட்டதொகை டெபாசிட்டை பெற முடியாத ஒருவர் இவ்வளவு பேச்சு பேசுவதை மக்கள் பொறுமையாக பார்த்துக் கொண்டு இருப்பது தமிழ் மக்களின் நாகரிகத்தை காட்டுகிறது.

சீமானுடைய பேச்சுகள் குறித்து ஏதேனும் புகார் அளிக்க உள்ளீர்களா? போராட்டம் நடத்த உள்ளீர்களா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த சுப.வீரபாண்டியன் கடந்த ஐந்தாம் தேதி சைதாப்பேட்டையில் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினோம். 2000 பேர் கூடி இருந்தார்கள். அவருக்கான கண்டனத்தை மட்டுமல்ல; அவருடைய உரைகளில் இருக்கிற முரண்களை - பொய்களை எடுத்துக்காட்டியுள்ளோம்.

ஆனால் அதுவே வேலையாக நாம் இருக்க முடியாது. திரும்பத் திரும்ப தன்னை பற்றிப் பேச வேண்டும் என்பதற்காக அவர் பேசிக் கொண்டிருக்கிறார். இப்போது என்ன தோன்றுகிறது என்று சொன்னால் எல்லாரும் அவரைப் பற்றி பேச வேண்டும் என்பதற்காகவே அவர் பேசிக் கொண்டிருக்கிறார். இப்போது எனக்கு தோன்றுவது என்னவென்றால், யாரும் அவரைப் பற்றி பேசாமல் விட்டு விட்டால் அவருக்கு பேசுவதற்கு எதுவுமே இல்லை. இரண்டு நாட்களில் ஓய்ந்து விடுவார்.

ஆளுநர் மாளிகை, முதலமைச்சரின் செயல் சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறது என்று வெளியிட்டு இருக்கிறதே. அது குறித்த கேள்விக்கு பதில் அளித்த சுப.வீரபாண்டியன் சிறுபிள்ளைத்தனத்தை மொத்த குத்தகைக்கு எடுத்து வைத்தவர்கள் ஆளுநர் மாளிகையில் தான் இருக்கிறார்கள். எனவே அவர்கள் வேறு மாதிரி என்று நம் முதலமைச்சரை சொல்லுகிறார்கள். முதலமைச்சரை மக்கள் கொண்டாடுகிறார்கள். ஆர்.என்.ரவி வேக வேகமாக சட்டமன்றத்தை விட்டு வெளியே வந்தார் தமிழ்நாட்டை விட்டும் வெளியே போனால் நல்லது.

ஆளுநரின் செயல் மக்களுக்கு முரணாக இருக்கிறதா அல்லது அரசுக்கு எதிராக இருக்கிறதா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த சுப வீரபாண்டியன் ஆளுநருடைய செயல் அடிப்படை ஜனநாயகத்திற்கே முரணாக உள்ளது. இந்திய அரசியல் அமைப்பு சட்டத்துக்கு முரணாக இருக்கிறது. தமிழர்களின் நலனுக்கு எதிராக இருக்கிறது. எனவே ஆளுநர் என்கிற பதவியே முரணானது தான். எனவே ஆர்.எஸ்.எஸ்.சும் வேண்டாம், ஆளுநரும் வேண்டாம் என்பதுதான் நமது கோரிக்கை என்றார்.

### தமிழ்ப் புத்தாண்டு - தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை

# நெல்லை கிழக்கு மாவட்டத்தில் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை. ஜன.14-

திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ் புத்தாண்டு துவக்கம்தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள்சமத்துவ பொங்கல் நிகழ்ச்சிகளை நெல்லை கிழக்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு பகுதிகளில் எழுச்சியுடன் கொண்டாடுவீர்.என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

எத்திக்கும் புகழ் மணக்கும் தித்திக்கும் திராவிட மாடல் ஆட்சியில் நாளும் நல்ல பல திட்டங்களால் தமிழ்நாட்டு மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்ந்து, வாழ்த்தி வருகின்றார்கள்.

'எல்லோருக்கும் எல்லாம்' என்ற உயரிய நோக்கத்தோடு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகிறார்கள். நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள்.அவர்களின் ஆட்சியில்தான் மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூபாய் 1000ம், பெண்களுக்கு கட்டணம் இல்லா விடியல் பயணம், மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் திட்டம் மூலம் மாதம் ரூபாய் 1000 ம், மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம் மூலம் மாதம் ரூபாய் 1000 ம், மக்களைத் தேடி மருத்துவம்,இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48 திட்டம், பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம், கலைஞர் அவர்கள் கனவு இல்லம், குடிநீர், சாலை, மின் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தியது.



அதிக வேலை வாய்ப்பு வழங்குவதிலும், அதிக தொழிற்சாலைகள் உருவாக்கியதிலும், அதிகப்படியான பெண் தொழிலாளர்கள் இருப்பதிலும், இந்தியாவில் தமிழ்நாடு தான் முதலிடம் இப்படி தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக எத்தனையோ நல்ல திட்டங்களை தினம்,தினம் செயல்படுத்தி வரும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் வருகிற தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை சமத்துவ பொங்கல் திருநாளாக கொண்டாடிட கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர்களின் அறிவிப்பை ஏற்று தமிழர் திருநாளை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், வார்டு மற்றும் கிளைக் கழகங்கள் தோறும் சமத்துவ பொங்கல் வைத்து கழகத்தின் இரு வண்ணக் கொடியை புதிதாக ஏற்றியும்,இனிப்புகள் வழங்கியும், கழகத்தின் கொள்கை விளக்கம் பாடல்களை ஒலிபரப்பியும், விளையாட்டு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கியும் உற்சாகமாக கொண்டாடிட கழகத்தினர் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், சிறாவயல் கிராமத்தில், பொங்கல் திருநாளையொட்டி, நடைபெற உள்ள மஞ்சுவிரட்டு நிகழ்ச்சிக்கான முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பாக, நேற்று முன்தினம் (12.1.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, உதவி காவல் கண்காணிப்பாளர் கலைகதிரவன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் இராமச்சந்திரன், மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் செல்வகுமார், திருப்பத்தூர் வட்டாட்சியர் மாணிக்கவாசகம், சிறாவயல் மஞ்சுவிரட்டு குழுத்தலைவர் வேலுச்சாமி அம்பலம் மற்றும் விழா ஒருங்கிணைப்பாளர்கள், கால்நடைப் பராமரிப்புத்துறை, மருத்துவத்துறை, வருவாய்த்துறை மற்றும் காவல்துறை உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.